**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**20 நவம்பர் 2015 / 08 ஸஃபர் 1437**

# <u>பங்களிப்பதில் ஒவ்வொரு தனிநபரிடமும் காணப்படும் ஆற்றல்</u>

اَلْحَمْدُ للهِ الَّذِي أَنْزَلَ الفُرْقَانَ وَ أَيَّدَ النَّاسَ بِالحِكْمَةِ وَ البَيَانِ،
وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ شَهِدَ لِنَفْسِهِ
الْوَحْدَانِيَّةَ وَ الإِحْسَانَ وَشَهِدَ بِهِمَا مَلاَئِكَتُهُ وَ الثَّقَلاَنِ، وَأَشْهَدُ
أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ المَبْعُوثُ بِالرَّحْمَةِ وَ الرِّضْوَانِ ،
اَللَّهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَ عَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ
تَسْلِيْمًا كَثِيْرًا.أَمَّا بَعْدُ فَيَا عِبَادَ اللهِ اتَّقُوْا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ
تَمُوْتُنَّ إِلاَّ وَأَنْتُمْ مُسْلِمُوْنَ.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமக்குக் கட்டளையிட்டுள்ள அனைத்து கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பதன் மூலமாகவும், அவன் நமக்குத் தடை செய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான நமது "தக்வா" எனும் பக்தியை உறுதி செய்துகொள்வோமாக! அல்லாஹ்

சுப்ஹானஹு வதஆலா நமக்கு அவனது நேர்வழியைக் காண்பிப்பானாக! இன்ஷாஅல்லாஹ். ஆமீன்.

ஜமாஅத்தார்களே!

இம்மாதம் முழுவதும் நிகழ்த்தப்பட்ட பிரசங்கங்கள், ஒவ்வொரு முஸ்லிமும் சன்மார்க்கக் கல்வியைத் தேடுவதன் அவசியத்தை வலியுறுத்தின. சன்மார்க்கக் கல்வியைத் தேடுவதானது வயது வரம்பின்றி அனைவருக்கும் அவசியமாகும். நீங்கள் தாயாகவோ, தகப்பனாகவோ, பாட்டி, பாட்டனாராகவோ, இளைஞர் அல்லது குழந்தைகளாகவோ எப்படி இருந்தாலும் உங்கள் அனைவர் மீதும் கடமையாகும். கடந்த வாரப் பிரசங்கத்தில், மற்றவர்களுக்கு இரண்டாவது வாய்ப்பைக் கொடுப்பதன் அவசியத்தைப் பற்றியும், தம்மை மாற்றிக் கொண்டு அல்லாஹ்வின் பாதையின் பால் திரும்புவதற்கான வாய்ப்புகளை அவர்களுக்கு ஏற்படுத்துவதன் அவசியத்தைப் பற்றியும் விவாதிக்கப்பட்டது.

இந்த வாரம், நமது சமூகத்தில் காணப்படும் மற்றொரு முக்கிய வகுப்பாரை உங்கள் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன். அவர்கள் நமது உதவி மற்றும் அக்கறையின் பால் அவசியமாக உள்ளார்கள். இத்தனிநபர்களுக்குச் சில முக்கியத் தேவைகள் உள்ளன. அவர்களுக்கு உடல் ரீதியிலான சில பிரச்சனைகள் இருந்த போதிலும், அவர்களிடமும் சன்மார்க்கம் மற்றும் சமுதாயத்துக்குப் பங்காற்றக் கூடிய ஆற்றல்கள் உள்ளன என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். குறிப்பிட்ட தேவைகளுடைய சில தனிநபர்களை சமூகத்தின் மீதான சுமையாகக் கருதக்கூடாது என அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா ஒரு வரலாற்றின்

மூலம் நமக்கு நினைவூட்டுகிறான். நமது சமுதாயத்தை முன்னேற்றுவதிலும், முன்னேற்றத்தின் அடுத்த நிலைக்கு சமுதாயத்தைக் கொண்டு செல்வதிலும் நம்முடன் இணைந்து அவர்களும் பங்காற்றுவதற்கான ஆற்றலை அவர்கள் பெறுவதை நாம் உறுதி செய்ய வேண்டும். அதற்கான வழிமுறைகளைக் காண வேண்டும்.

பாசத்திற்குரிய ஜமாஅத்தார்களே!

ஒருமுறை "அப்துல்லாஹிப்னு உம்மி மக்தூம்" எனும் பெயருடைய கண் பார்வைத் தெரியாத ஒரு நபித்தோழர் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களிடம் சன்மார்க்கம் சம்பந்தமான வழிகாட்டுதலைப் பெற வந்தார். ஆனால் அந்த நேரத்தில் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் குறைஷிகளின் தலைவர்களுக்கு இஸ்லாத்தின் பால் அழைப்பு கொடுத்துக் கொண்டிருந்தார்கள். எனவே, அப்துல்லாஹிப்னு உம்மி மக்தூம் (ரலி) அவர்களுக்குப் பதிலளிக்க அவர்களால் முடியவில்லை. இச்சம்பவத்தை முன்னிட்டு அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் "அபஸ" எனும் அத்தியாயத்தில் காணப்படும் வசனங்களை இறக்கியருளினான். அவ்வசனங்களில் சில பின்வருமாறு:

عَبَسَ وَتَوَلَّىٰ ﴿١﴾ أَن جَاءَهُ الْأَعْمَىٰ ﴿٢﴾ وَمَا يُدْرِيكَ لَعَلَّهُ يَزَّكَّىٰ ﴿٣﴾
أَوْ يَذَّكَّرُ فَتَنفَعَهُ الذِّكْرَىٰ ﴿٤﴾

பொருள்: (இறைத்தூதர்) முகம் சுளித்தார்; மேலும், புறக்கணித்தார்; அந்தப் பார்வையிழந்தவர் அவரிடம் வந்ததற்காக! அவர் சீர்திருந்தக்கூடும்; அல்லது அறிவுரைக்குச் செவி சாய்க்கக்கூடும்; அந்த அறிவுரை அவருக்குப்

பயனளித்திருக்கும் என்பது பற்றி (இறைத்தூதரே!) உமக்குத் தெரியுமா, என்ன? (அத்தியாயம்: அபஸ, வசனம் 1-4)

இப்போது ஓதிக் காண்பிக்கப்பட்ட வசனமானது, எவர்களை அல்லாஹ் உடலியல் குறைபாடுகளால் சோதித்துள்ளானோ அவர்கள் விஷயத்தில், நாம் மற்றவர்களுக்குக் கொடுக்கும் அதே அளவிலான அக்கறையைச் செலுத்த வேண்டும் என அல்லாஹ்வின் புறத்திலிருந்து நமக்கு வந்துள்ள நினைவூட்டுதலாக உள்ளது. அவ்வாறு அக்கறை செலுத்துவதை உறுதி செய்யுமாறு வலியுறுத்துகிறது. அவர்கள் உடலியல் ரீதியில் சவால்களை எதிர்கொள்பவர்களாக இருக்கலாம்; எனினும், அல்லாஹ் அவர்களுக்கு பரிசுத்தமான உள்ளத்தையும் கூர்மையான அறிவாற்றலையும் வழங்கி அருள் புரிந்திருக்கலாம். அம்மாதிரியான அருள் நமக்கு வழங்கப்படாமலிருக்கலாம். அத்துடன், கல்வியைத் தேடும் உரிமையும் வழிகாட்டப்படும் உரிமையும் சோதனைகளை எதிர்கொள்ளும் அவர்களுக்கும் உள்ளது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

அப்துல்லாஹிப்னு உம்மி மக்தூம் (ரலி) விஷயத்தில் கவனக் குறைவாக நடந்து கொண்டதை முன்னிட்டு, அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் புறத்திலிருந்து நினைவூட்டுதலாக அமைந்துள்ள இச்சம்பவத்தில் நாம் பல பாடங்களைப் பெறக் கடமைப்பட்டுள்ளோம்.

எனவே, அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா எவர்களுக்கு சில குறைபாடுகளை ஏற்படுத்தி சோதித்துள்ளானோ அவர்களை விட நாம்

உயர்ந்தவர்கள் எனக் கருதக் கூடாது. முடியாத நிலையிலுள்ள அவர்களுக்கு உதவுவதற்காகவே அல்லாஹ் நமக்கு வாழ்வாதாரங்களை வளமாக வளங்கியுள்ளான் என்பதை நாம் உணர வேண்டும். ஒரு ஹதீதில் ரசூலுல்லாஹி(ஸல்) நவின்றுள்ளார்கள்:

உங்களில் தேவையுள்ளவர்கள் இருக்கின்றார்கள்; (அவர்களுக்கு நீங்கள் உதவ வேண்டும் என்பதைக் கவனத்தில் கொண்டு தான்) நீங்கள் உதவி செய்யப்பட்டுள்ளீர்கள்; வாழ்வாதாரங்கள் வழங்கப்பட்டுள்ளீர்கள். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் புகாரி (ரஹ்)

ஜமாஅத்தார்களே!

நாம் உண்மையான இறை நம்பிக்கையாளர்கள் எனும் ரீதியில், இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் நன்னடத்தைகளை ஆர்வத்துடன் பின்பற்றுவது அவசியமாகும். சமுதாயத்துக்குப் பங்காற்றும் வாய்ப்பை முஹம்மது (ஸல்) அவர்கள் அனைவருக்கும் வழங்கினார்கள். குறைபாடுகளை எதிர்கொள்ளும் தனிநபர்களை வித்தியாசப்படுத்திப் பார்க்கவில்லை. உண்மையில், ஒவ்வொருவரிடமும் எவ்விதமானத் திறமைகள் உள்ளன. எம்மாதிரியான பங்குகளை அவர்களால் ஆற்ற முடியும் என்பதையே ரசூலுல்லாஹி(ஸல்) கவனத்தில் கொண்டார்கள்.

அப்துல்லாஹிப்னு உம்மி மக்தூம் (ரலி) அவர்கள் கண் பார்வைத் தெரியாதவர்களாக இருந்தும் கூட, ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் மதீனாவை விட்டும் வெளியேறும் போது, மதீனாவைக் கண்காணிக்கும் பொறுப்பை அவர்களிடம் ரசூலுல்லாஹி(ஸல்) ஒப்படைத்தார்கள். இவ்வாறு பல தடவை அப்பொறுப்பை அவர்களுக்கு வழங்கினார்கள்.

அப்துல்லாஹிப்னு உம்மி மக்தூம் (ரலி) அவர்கள் ஆரம்ப காலத்திலேயே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட நபித்தோழராக இருந்ததாலும், இறைத்தூதர்(ஸல்) அவர்களிடமிருந்து நேரடியாகக் கல்வியைக் கற்றவராக இருந்ததாலும், ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் மதீனாவுக்கு "ஹிஜ்ரத்" எனும் தியாகப் பயணம் செய்வதற்கு முன்பாகவே மதீனாவாசிகளுக்கு சன்மார்க்கத்தையும் திருக்குர்ஆனையும் போதிக்க அவர்கள் அனுப்பப்பட்டார்கள்.

மேற்கண்ட விஷயம், ஒருவர் பார்வைக் குறைபாடுள்ளவராக இருந்தாலும் எப்போதும் அவர் இருளில் தான் வாழ வேண்டுமென்பது அவசியமில்லை எனச் சுட்டிக் காட்டுகின்றது. உள்ளம் கல்வியறிவாலும் புரிந்துணர்வாலும் நிரம்பி விடும் போது, கண்பார்வைக் குறைபாடுள்ளவர், பார்க்க முடிகின்றவர்களை விட அதிகப் பிரகாசமானவராகவும் அறிவுத் திறன்மிக்கவராகவும் ஆகி விடுகிறார். பார்க்கும் சக்தி உள்ளவர்களுக்கு போதிக்கும் ஆசிரியராகவும் அவர் ஆகி விடுகிறார். இதற்கு, அப்துல்லாஹிப்னு உம்மி மக்தூம் (ரலி) அவர்களின் வரலாற்றை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

கடந்த சில வாரங்களாக, சமுதாயத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் நமது சமுதாயச் சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் வகையில், விசாலமான இஸ்லாமியக் கல்வியறிவைப் பெறுவதை உறுதி செய்ய வேண்டுமென நாம் நினைவூட்டப்பட்டோம். நாம் சகிப்புத் தம்மை மிக்க சமுதாயமாக முன்னேறுவதற்கு இது அவசியமாகும்.

சகிப்புத்தன்மை மிக்க உயிரோட்டத்தை நாம் உருவாக்க வேண்டும். அப்போது தான், நாம் உலகத்துக்கு இஸ்லாத்தை எடுத்து இயம்பும் உண்மையானத் தூதர்களாக ஆகலாம். குறிப்பாக, மனிதாபிமான சோகங்களும், இரத்தம் தோய்ந்த மோதல்களும் உலகின் பல்வேறு பகுதிகளில் காணப்படும் இந்நாளில், சகிப்புத்தன்மை மிகவும் அவசியமாக உள்ளது. அழிவுகள், பேரழிவுகள், கொலைகள், இரத்தம் சிந்துதல், வன்முறைத் தாக்குதல்கள் போன்றவை சண்டைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பகுதிகளில் மட்டும் நடைபெறவில்லை. இது போன்ற நிகழ்வுகள் அன்றாடம் நடைபெறுகின்றன என சர்வதேசப் பத்திரிக்கைகள் அவ்வப்போது சுட்டிக் காட்டி வருகின்றன. பாரீஸ், பெய்ரூத், சிரியா, ஈராக் என இன்று கூறப்படும் இடங்களும், அவற்றில் நடைபெறும் சம்பவங்களும் அமைதியை விரும்பும் ஒவ்வொருவரின் உள்ளங்களை வெட்டிப் பிளப்பதாக உள்ளன.

உயிர்களை, சொத்து, செல்வங்களை மற்றும் அமைதியை அழிக்கும் செயல்களை நாம் ஒருபோதும் ஏற்க முடியாது. இவ்விதமானக் குற்றங்களைப் புரிபவர்கள் யாராக இருந்தாலும், அக்குற்றங்கள் எங்கு நடைபெற்றாலும் அவற்றை ஏற்க முடியாது.

இப்பிரச்சனை இன்று பூதாகாரமாக வெடித்துள்ளது. உலக மக்கள் அனைவரும் இச்சோதனையை எதிர்கொள்கிறார்கள். இதன் வலியை முஸ்லிம் சமுதாயம், சகோதர சமுதாயத்தவர்கள் அனைவரும் உணர்கிறார்கள். இப்பிரச்சனையை எதிர்கொள்வது ஒரு குறிப்பிட்ட சாராருக்கு மட்டும் கடமையல்ல; இப்பொறுப்பைப் பகிர்ந்து கொள்வதிலிருந்து எந்த வகுப்பாரும் தம்மை விடுவித்துக் கொள்ள இயலாது.

நாம் முஸ்லிம் சமுதாயத்தின் ஒரு பகுதியாக இருக்கின்றோம் எனும் ரீதியில், நம்மால் எவ்வாறு இவ்விஷயத்தில் பங்காற்ற இயலும் எனச் சிந்திக்க வேண்டும். எனது சகோதரர்களே! இஸ்லாம் நமக்குப் போதித்துள்ள சிறந்த மதிப்பீடுகளை நாம் நன்றாக அறிய வேண்டும்; அவற்றை நமது வாழ்வில் செயல்படுத்த வேண்டும் என நாம் தீர்மானம் எடுத்து, அதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். சரியான, உண்மையான மூலங்கள் மற்றும் ஆசிரியர்கள் மூலம் கல்வியறிவை ஆர்வமாகக் கற்றுக் கொள்வதன் மூலம் இஸ்லாத்தையும் இஸ்லாத்தின் தூதையும் நாம் உண்மையாக அறிய முற்பட வேண்டும். நாம் இஸ்லாத்தின் உண்மையானத் தூதை தொடர்ந்து பிரதிபலிப்பவர்களாக இருக்க வேண்டும். இஸ்லாம் என்பது மனிதத் தன்மையை அதிகரித்து, வளர்க்கும் வாழ்க்கை வழிமுறையாகும். உண்மையானக் கல்வியறிவும், இஸ்லாத்தைப் பற்றிய உண்மையானப் புரிந்துணர்வும் இல்லாமல் இஸ்லாத்தின் உண்மையானத் தோற்றத்தை நம்மால் பிரதிபலிக்க முடியாது. இவையெல்லாம் கடந்த பல வாரங்களாக, பிரசங்கங்களில் பலமுறை நினைவூட்டப்பட்டவையாகும்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, அவனது மார்க்கத்தை எடுத்து இயம்பும் உண்மையானத் தூதர்களாக நாம் ஆகுவதற்கான தீர்மானத்தை நமக்கு வழங்குவானாக! நமது குடும்பத்தார்களையும் சமுதாயத்தையும் நாட்டையும் தீமைகளிலிருந்து தொடர்ந்து பாதுகாக்க வேண்டுமென எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் வேண்டிக் கொள்கிறோம். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா அமைதியை மீண்டும் வழங்குவானாக! பூமியில் காணப்படும் அனைத்து தீய சக்திகளையும் அழிப்பானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُولُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمِ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.